## பொருளடக்கம்


| | |
|---|---|
| விவிலிய தொனி தலையங்கம் | 1 |
| பொருளடக்கம் | 2 |
| ஆசிரியரிடமிருந்து | 3–4 |
| வேதாகமம் பற்றிய சில உண்மைகள் | 5 |
| பெயர்களும் பொருள்களும் | 6 |
| இயேசு கிறிஸ்துவைக் குறிக்கும் பெயர்கள் | 7–8 |
| வேத அறிவுப் போட்டி – 6 முடிவுகள் | 9 |
| சங்கீதத்தில் ஆரோகணம் | 10 |
| முள்ளுகளினாலான முடி | 11 |
| விவிலியத்தின் நூல்கள்: யோசுவா | 12–13 |
| வேதாகமமும் தொல்பொருள் ஆராய்ச்சியும் | 14–15 |
| யார் அந்த அந்தி கிறிஸ்து? | 16–17 |
| பிரசங்கக் குறிப்புகள் | 18 |
| கேள்வி பதில்: நேபுகாத்நேச்சார் | 19 |
| குணாதிசங்கள் | 20 |
| வேத அறிவுப் போட்டி – 8 | 21 |
| செய்திகள் | 22 |
| இதழ்/சந்தா பற்றிய விவரம் | 23 |
| எபிரேய கிரேக்க மொழி வகுப்புகள் | 24 |



**A RARE OPPORTUNITY!**

**Do you desire to understand the biblical truth in a clear manner by learning HEBREW & GREEK, the original Languages of the HOLY BIBLE?**

**Classes begin in Aprril, 2004**

**at Periyar Nagar (near Don Bosco School)**

**Chennai - 600 082**

**Contact The editor for details**




இவ்விதழினைத் தொடர்ந்து பெற்றுக்கொள்ள விரும்புவோர்
ஆண்டு சந்தா ரூபாய் 60/- (12 இதழ்களுக்கு)
அனுப்பவேண்டிய முகவரி:


The Publisher
**Biblia Dhwani**
90/A, Kamaraj Street
Thiruvalluvar Nagar
Ayanavaram
Chennai - 600 023
INDIA

Phone: 26602779 E-mail : berithvoice@vsnl.net


உங்கள் கவனத்திற்கு PLEASE !

* சந்தா அனுப்பும்போது சரியான விலாசத்தினை தெரியப்படுத்துங்கள். தபால் கோட்டினை (PIN code) குறிப்பிட மறவாதீர்கள்.
* உங்கள் சபைகளுக்கோ, ஜெபக்கூட்டங்களுக்கோ, வேத ஆராய்ச்சி வகுப்புகளுக்கோ பத்திரிகை தேவைப்பட்டால் தொடர்பு கொள்ளுங்கள்.
* சென்னையை தவிர மற்ற இடங்களிலுள்ளவர்கள் சந்தாவை வரையோலை (Cheque) மூலம் அனுப்பவிரும்பினால், ரூபாய் 30/– சேர்த்து அனுப்புதல் வேண்டும். அல்லது D.D. / M.O. மூலம் மட்டுமே செலுத்தும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.
* இலவச இதழ் கேட்டு பல கடிதங்கள் வருகிறது. அவர்களுக்கு ஒன்று அல்லது இரண்டு இதழ்கள் மாதிரி இதழாக மட்டுமே அனுப்பப்படுகிறது. சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மட்டுமே தொடர்ந்து இதழ் அனுப்பப்படும். இதழ் தேவைப்படுவோர் கடிதம் எழுதி விளக்கம் கேட்பதற்கு பதிலாக, சந்தாவை அனுப்பினால் தவறால் ஒவ்வொரு மாதமும் 29 -ம் தியதி தபாலில் இதழினைப் பெற்றுக்கொள்ளலாம்.


Published & owned by P. Nelson, Published from 90/A, Kamaraj Street, Thiruvalluvar Nagar, Ayanavaram, Chennai - 600 023 and Printed by Dr. G. Kulothungan, at Arul Achagam, No. 30 (old no. 25), Kandasamy Salai, Periyar Nagar, Chennai - 600 082.
**Editor: P. Nelson**

# செய்திகள்

மார்ச் மாதம் 20–ம் தேதி உலக வன நாள் உலகெங்கிலும் கொண்டாடப்பட்டது. காடுகளின் அவசியத்தை கவனத்தில் கொண்டு அவற்றின் அளவைப் பெருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் 1938–ல் இந்திய வனக் கல்லூரி டோராடூனில் தொடங்கப்பட்டது. அதன் வளர்ச்சி மற்றும் 'இந்தியன் பாரஸ்ட்ரி சர்வீஸ்' குறித்த விரிவான தகவல்களை www.ifs.nic.in என்ற இணைதளத்தில் பார்த்து தெரிந்து கொள்ளலாம். குழந்தைகளுக்கு காடுகள், சுற்றுச்சூழல் குறித்த ஆர்வத்தை தூண்டி அறிவினை வழங்க www.gobartimes.org, www.sanctuarycub.com ஆகிய இணைத்தளங்கள் உள்ளன.

இந்திய பாராளுமன்ற தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் மார்ச் மாதம் 24–ம் தேதி ஆரம்பமாயிற்று. இதற்கான அதிகாரப் பூர்வமான அறிவிப்பினை குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் வெளியிட்டார்.

தீவிரவாத அச்சுறுத்தலை இந்தியா உட்பட 84 நாடுகள் அங்கீகரித்துள்ளள, அதை எதிர்த்துப் போராடுவதெனவும் உறுதிப்பாடு கொண்டுள்ளன என அமெரிக்க அதிபர் புஷ் கூறியுள்ளார்.

நிகர்நிலை பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் சேர்க்கையை UGC மட்டுமே கட்டுப்படுத்த முடியும் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

**உங்களுக்குத் தெரியுமா?**

*விண்வெளிக்கு சென்ற முதல் மிருகம் லயக்கா (Liaka) என்ற நாய்.
*அதிக நினைவாற்றல் உள்ள மிருகம் யானை.
*பட்டுப் பூச்சிக்கு 11 மூளைகள் உண்டு.
*விவிலியத்தில் சொல்லப்பட்டிருக்கும் மிகப்பெரிய மிருகம் லிவியாதான்.
*நத்தைகள் மூன்று, நான்கு ஆண்டுகள் தொடர்ந்து தூங்கக்கூடியது.

*தென் அமெரிக்கரிவிலுள்ள தினாமூ என்ற பறவை 'ஈஸ்டர் முட்டை ஈயும் பறவை' (the Easter Egg Bird) என அழைக்கப்படுகிறது. இந்த பறவை நீலம், பச்சை, மஞ்சள், வெளிர் சிவப்பு போன்ற பல வண்ணங்களில் முட்டைகளை ஈயும் தன்மைக் கொண்டது.



# ஆசிரியரிடமிருந்து

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

நமது மீட்பர் இயேசு கிறிஸ்துவின் நல் நாமத்தில் வாழ்த்துக்கள்.

விவிலியதொனியின் மார்ச் மாத இதழ் மூலமாகவும் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இவ்விதழ் பலரது வாழ்க்கைக்கும் ஊழியங்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருப்பது மகிழ்ச்சிக்குரியது. கர்த்தரின் செயல்கள் எப்பொழுதும் பயனுள்ளதாகவே அமையும் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் தோன்றியதில்லை. அதுவே உங்கள் நம்பிக்கையாகவும் இருக்கிறது என்பதனை அறிந்து நமது தேவனை துதிக்கின்றேன்.

விவிலியதொனி மறைபொருட்களை வெளிப்படுத்தும் ஓர் கருவியாக அமையப்பெற்றிருப்பது உண்மைதான். வேதாகமம் ஓர் வெளிப்பாடு. இந்த வெளிப்பாட்டிளை வெளிப்படையாக கற்றுக்கொண்டால் மட்டுமே அது நமக்கு பயனுள்ளதாக அமையும். ஆனால் இன்று அனேகருக்கு விவிலியம் ஓர் மறைபொருளாகவே உள்ளது. காரணம் அவர்கள் வேதாகமத்தினை ஓர் இரகசிய நூலாகவே பார்க்கின்றனர்; அல்லது இவர் எனக்கு இப்படிதான் சொன்னார் எனவே நான் இப்படிதான் விவிலியத்தை நோக்குவேன் எனக் கருதி, தனக்கும் வேதாகமத்திற்கும் தேவனுக்குமுள்ள தொடர்பிலிருந்து விடுபட்டுக் கிடக்கின்றனர். பரந்த நோக்கோடும் சுய சிந்தனையோடும் விவிலியத்தினை பார்ப்பதில்லை. நாம் விவிலியத்தினைப் படிக்கும்போது நான்–விவிலியம்–தேவன் என்ற சிந்தனையோடு நோக்கும்போது தேவனின் வெளிப்பாட்டினை நாம் அறிந்துகொள்ள முடியும். அல்லாவிடில் பிறருடைய வெளிப்பாடு மட்டுமே நமக்கு தோன்றும். இத்தகைய பரந்த நோக்கோடு வேதாகமத்தின் கருத்துக்களை யாவரும் அறிந்துகொள்ள விவிலிய தொனி உதவிபுரிகிறது.

விவிலிய தொனியின் வேத அறிவுப்போட்டி ஆழ்ந்த சிந்தனையோடும் கருத்தோடும் வேதாகமத்தினை படிக்க நமது சிந்தனையை தூண்டுவதாக உள்ளது என வாசகர்கள் கூறும் கருத்துக்கள் மேலும் மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது. பலர் தவறாது பதில்கள் அனுப்புகின்றீர்கள். அவ்விதம் பதில்

அனுப்பிய பலரது பெயர்கள் கடந்த இதழில் இடம் பெறாமைக்கு வருந்துகின்றேன். அவர்களது பெயர்கள் இந்த இதழில் இடம்பெற்றுள்ளன.

இந்த நாட்கள் கிறிஸ்தவர்களின் நோன்பு (உபவாசம்) நாட்களாக அனுசரிக்கப்படுகிறது. ஏனெனில், அவர்கள் சிறப்புஆராதனைகள் மூலமாக கிறிஸ்துவின் பாடு, மரணம், உயிர்த்தெழுதல், மற்றும் அவரது வருகையினை நினைவு கூருகின்ற காலமாக உள்ளது. இந்த நாட்கள் கிறிஸ்துவின் சிலுவையினை அதிகமாக நினைப்பூட்டுகின்ற காலம். சிலுவை என்பதின் பொருளினையும் அதனை நம்புகின்றவர்களின் கடமையையும் பவுல் அப்போஸ்தலர் சுருக்கமாகவும் தெளிவாகவும் தெரிவிக்கின்றார்: “ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து இப்படியாக கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்.” கிறிஸ்துவின் பிரமாணம் என்றால் என்ன? கிறிஸ்துவைப்போல வாழ்வதும் அதன்படி செயல்படுவதுமே அவரது பிரமாணத்தை நிறைவேற்றுவதாகும். கிறிஸ்துவைப்போல வாழ்வது என்பது அவரது சித்தத்தை, நோக்கத்தை நிறைவேற்றுவதாகும். அவரது சித்தத்தை நிறைவேற்றுவது என்பது அவரது வார்த்தைகளை மட்டுமின்றி அவரது செயல்களையும் ஏற்றுக்கொள்வதாகும். அவரது நோக்கம் மக்கள் மீட்புதான். அவரது செய்கை என்பது மீட்புக்காக சிலுவையை ஏற்றுக் கொள்வதுதான். சிலுவை என்பது பாடுகளை ஏற்றுக்கொள்ளுதல். தேவன் மனிதனாகி மக்களுக்காக மரத்தில் மனுஉருவை மாய்த்ததினால் மானிடருக்கு மகத்துவமான மகிமை தோற்றுவிக்கப்பட்டது. அத்தகைய சிலுவையினை அவர் தனக்காக ஏற்றுக்கொள்ளாமல் பிறருக்காகவே சுமந்தார். அந்த சிந்தை நமக்கு இருக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும். கிறிஸ்தவர்கள் தனக்காக மட்டும் வாழாமல், பிறருக்காகவும் வாழவேண்டியது அவர்களது கடமைகளில் முக்கியமான ஒன்று. கிறிஸ்துவின் சிந்தை ஒருவரில் இருக்குமாயின் அவர் நிச்சயம் இதனைப் பின்பற்றுவார் என்பதில் ஐயமில்லை. இந்த சிலுவையின் நாட்களில் அத்தகைய சிந்தையோடு செயல்பட தேவன் நமக்கு அருள்புரிவாராக.

---

மத்தேயு 27: 19–ல் பெயர் குறிப்பிடப்படாத பிலாத்துவின் மனைவி முதலாம் நூற்றாண்டு கதைகளில் புரோக்ளா என அழைக்கப்படுகிறாள். எத்தியோப்பியா சபைகளில் இவள் புனிதராகக் (Saint) கருதப்பட்டு, பண்டிகைகள் கொண்டாடுகின்றனர். கிரேக்க சபைகளிலும் புரோக்ளா புனிதராக கருதப்படுகிறாள். பிலாத்து தற்கொலைசெய்து கொண்டதாகவும், நீரோ மன்னன் காலத்தில் தலைவெட்டப்பட்டதாகவும் கூறப்படுகிறது.



# வேத அறிவுப் போட்டி–8

பதில்கள் அனுப்பவேண்டிய கடைசி நாள் 31-4-2004.
பதில்களை உள்நாட்டு தபால் கவரில் (Innald) அல்லது அஞ்சல்உறையில் வைத்து அனுப்புதல் வேண்டும். அஞ்சல் தலை ஒட்டாத கவரினுள் வைத்து நேரிலும் தரலாம்.
சரியான தபால்தலை ஒட்டப்படாத பதில்கள்ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
விவிலிய தொனி சந்தாதாரர்கள் மட்டுமே இதில் பங்குபெற முடியும்.
சரியான பதில் அனுப்புகின்ற மூன்று நபர்களுக்கு வேதாகமம் பரிசாக வழங்கப்படும். மூன்றிற்கு அதிகமான பதில்கள் சரியாக இருப்பின் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவர்.
பரிசு பெறுபவர்கள் விவரம் ஏப்ரல் மாத இதழில் வெளியாகும்.
12 இதழ்களில் வெளிவரும் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்குரிய பரிசுகளும் வாழ்த்துமடல்களும் 13-வது மாதத்தில் நடைபெறும் ஸ்தோத்திர கூட்டத்தில் அவர்களைக் கவுரவித்து வழங்கப்படும். நேரில் வர இயலாதவர்களுக்கு அவர்கள் விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.
பரிசு அளிக்க உதவி செய்யும் அன்பர்களுக்கு மிக்க நன்றி. நீங்கள் யாரேனும், உங்கள் பெயரிலோ அல்லது உறவினர்கள் ஞாபகார்த்தமாவோ பரிசுகள் வழங்க முன் வந்தால் வரவேற்கப்படுகிறீர்கள்.
கீழ் சொல்லப்பட்ட வாக்கியங்கள் யோவான் சுவிசேஷ நூலிலிருந்து எடுக்கப்பட்டவைகள். இதனை **சொன்னது யார்** என யோவான் நற்செய்தியிலுள்ள வசனங்களின் ஆதாரங்களோடு எழுதி அனுப்புங்கள்.

1. “இயேசுவைக் காண விருப்புகிறோம்”
2. “வந்து பார்”
3. “நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர்”
4. “நீர்...கிறிஸ்து என்று நான் விசுவாசிக்கிறேன்”
5. “நீ என்னைப் பின்பற்றிவா”
6. “நீங்களும் வஞ்சிக்கப்பட்டீர்களா?”
7. “சிலுவையில் அறையுங்கள்”
8. “உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டு”
9. “சிலுவையில் அறையலாமா”
10. “சிலுவையில் அறையும்”

# குணாதிசயங்கள்

## மகதலேனா மரியாள்

| | |
|---|---|
| இயேசுவால் சுகமாக்கப்பட்டவள் | லூக். 8: 2 |
| இயேசுவின் பாடுகளில் பங்கெடுத்தவள் | லூக். 7: 36–50 |
| இயேசுவின் பணிக்கு மிகவும் உதவியவள் | லூக். 8: 1–3 |
| இயேசுவின் இறுதி பயணத்தில் பங்கெடுத்தவள் | மாற். 15: 41 |
| இயேசுவின் சிலுவை வரை பின்சென்றவள் | மாற். 15: 40 |
| இயேசுவின் தனிப்பட்ட காட்சியைப் பெற்றவள் | யோ.20: 11–18 |
| இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு சாட்சி | லூக். 24: 1–11 |

விவிலியத்தில் ஆசீர்வாதம் *(blessing)* என்பது செல்வபெருக்கினைக் குறிக்காமல், மகிழ்ச்சியாக வாழ்வதையேக் குறிக்கிறது. בְּרָכָה (ஆசீர்வாதம்) என்பதின் சரியான மொழியாக்கம் “மகிழ்ச்சி.” எனவேதான் மலை பிரசங்கத்தில் இயேசு இதனை வலியுறுத்தி சொல்கின்றார். உதாரணமாக, ஆவியில் எளிமையுள்ளவன் பாக்கியவான் என்றால் ஆவியில் எளிமையுள்ளவன் மகிழ்ச்சியாயிருப்பான் என்றே பொருள்படுகிறது.

பக்கம் 19 தொடர்ச்சி புல்லை சாப்பிடாமலிருந்திருப்பான் என சொல்ல முடியாது. இளைய குமாரன் உவமையில் புத்தியற்ற இத்தகைய செயலை இயேசு விளக்குவதை நாம் அறியலாம். இளைய குமாரன் பன்றிகள் தின்கிற தவிட்டினைக்கூட சாப்பிட மனதாயிருந்தான் பசியினால். நேபுகாத்நேச்சரோ தான் என்ன செய்வதென தெரியாது, கவனிப்பாரற்று கேவலமாக வாழ்ந்து வந்தான் என்பது உண்மையே. ஆயினும் அவன் தனது பெருமைகளைவிட்டு தனக்கு எல்லாவற்றையும் தந்தருளிய இறைவனை (பரலோகத்தின் ராஜாவை) நோக்கிப் பார்த்தபோது அவனது புத்தி திரும்ப அவனுக்குள் வந்தது (வ. 34, 36). அப்பொழுது அவன் இழந்துபோனவைகளைத் திரும்ப பெற்றுக்கொள்கின்றான்.

தன்னைத்தான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்; தன்னைத்தான் தாழ்த்துகிறவன்உயர்த்தப்படுவான்என்பதுஎவ்வளவு உண்மையாயிருக்கிறது.



# வேதாகமம் பற்றிய சில உண்மைகள்

பழைய ஏற்பாடு சுமார் 1000 ஆண்டுகளாக எழுதப்பட்டது. புதிய ஏற்பாடு சுமார் 100 ஆண்டுகளாக எழுதப்பட்டது.

பழைய ஏற்பாடு சுமார் 39 ஆக்கியோன்களால் எழுதப்பட்டது. புதிய ஏற்பாடு சுமார் 8 ஆக்கியோன்களால் எழுதப்பட்டது.

பழைய ஏற்பாடு எழுதியவர்களில் முக்கியமானவர்கள் மோசே, யோசுவா, தீர்க்கதரிசிகள், எஸ்றா ஆகியவர்கள். புதிய ஏற்பாடு எழுதியவர்களில் முக்கியமானவர்கள் மத்தேயு, பேதுரு, யோவான், பவுல், ஜான்மார்க்கு, லூக்கா, யாக்கோபு, யூதா ஆகியவர்கள்.

பவுலின் நிருபங்களே சுவிசேஷங்களுக்கு முன் எழுதப்பட்டவைகள். சுவிசேஷ நூல்களில் மத்தேயு முதலில் இடம்பெற்றாலும் மாற்குதான் முதலில் எழுதப்பட்டது.

பழைய ஏற்பாட்டினைப்போல புதிய ஏற்பாட்டு நூல்களும் கால வரிசைப்படி அமையவில்லை. பவுலின் நிருபங்கள் கூட காலவரிசைப்படி அமையவில்லை. உதாரணமாக, கலாத்தியர், 1 தெசலோனிக்கேயர் ஆகியவை பிலேமோனுக்கு எழுதிய நிருபத்திற்கு முந்தியவைகள். நிருபங்களின் நீளத்தைப் பொறுத்து முந்திபிந்தி அமையப்பெற்றுள்ளது.

பழைய ஏற்பாட்டின் உடனடி தொடர்பாகவும் நீண்ட தொகுப்பாகவும் இருப்பதினால் மத்தேயு முதலில் இடம்பெற்றுள்ளது. ஆதியாகமத்தில் இறைவனின் செயல்கள் அவரது படைப்பின் தோற்றத்தோடு ஆரம்பமாகி, ஆபிரகாமின் அழைப்பின் மூலமாக தேசம் உருவாக்கப்படுதல் வரை இடம்பெற்றுள்ளது. இவர்கள் மூலமாக அனைத்து மக்களின் விடுதலைக்காக தேவன் மனிதனானார். இது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததும், சரித்திர சான்றடங்கியதுமாகும் என்பதனை மத்தேயு வலியுறுத்துகிறது.

லூக்கா நற்செய்தி யூதரல்லாதவரால் எழுதப்பட்ட கிறிஸ்துவின் செயல்பாடுகள் அடங்கிய நூல். லூக்கா பெயர்பெற்ற ஓர் மருத்துவ ஆய்வாளர். கிறிஸ்துவை ஓர் ஒப்பற்ற மருத்துவராக வெளிப்படுத்துகிறார்.

## பெயர்களும் பொருள்களும்

| | | | |
|---|---|---|---|
| Gabriel | Man of God | காபிரியேல் | தேவனுடைய மனிதன் |
| Goliath | Great | கோலியாத் | பெரியவன் |
| Gamaliel | Kindness of God | கமாலியேல் | தேவனுடையஇரக்கம் |
| Judah | Praise | யூதா | துதி |
| Japheth | Enlargement | யெப்தா | விஸ்தரிப்பு |
| Saul | Asked for | சவுல் | கேட்டுக்கொள்ளப்பட்டவன் |
| Gimzo | Sycamore tree | கிம்சோ | அத்தி மரம் |
| Gilgal | Circle | கில்கால் | வட்டம் |
| Galilee | Circuit | கலிலேயா | சுற்று |
| Penuel | Face of God | பெனுயேல் | தேவனுடைய முகம் |

### சில எபிரேய வார்த்தைகளைக் கற்றுக்கொள்வோம்

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| זֶבַח | *zebah* | *sacrifice* | சாபா | பலி |
| מָוֶת | *mawet* | *death* | மாவெத் | மரணம் |
| בְּרָכָה | *berakah* | *blessing* | பெராக்கா | ஆசீர்வாதம் |
| דַּעַת | *da-ath* | *knowledge* | டாஆத் | அறிவு |
| הֵיכָל | *hekal* | *temple* | கே-கால் | ஆலயம் |
| צַדִּיק | *tzadak* | *righteous one* | சாடேக் | நீதிமான் |
| תֵּבָה | *tebah* | *ark* டாவா | உடன்படிக்கை | பெட்டி |
| כָּבוֹד | *haboth* | *glory* | காவோத் | மகிமை |



## கேள்வி பதில்

**நேபுகாத்நேச்சார் மாடுகளைப்போல புல்லைமேய்ந்தார் என்பது உண்மையா?**

நேபுகாத்நேச்சார் (Nebuchadrezzar) கி. மு. 605–562 வரை பாபிலோனிய (தற்போதைய ஈராக்கின் பெரும்பகுதி) அரசனாக விளங்கியவர். இவர் நெபோபோலெசரின் மகன். இவன் சுமார் 43 ஆண்டுகள் ஆட்சிசெய்தான். அதில் முதல் 10 ஆண்டுகள் மட்டுமே மிக சிறப்போடு செயல்பட்டதாக சரித்திர சான்றுகள் தெரிவிக்கின்றன. உள்நாடு மற்றும் வெளிநாடுகளிடமிருந்து தோன்றிய கிளர்ச்சிகளை திறமையோடு முறியடித்தான்.

இஸ்ரவேல் நாட்டின்மீது மூன்றுமுறை படையெடுத்து அதன் செல்வங்களை சூறையாடி, ஆலயத்தை பாளாக்கி, மதில்களை உடைத்து, நகரை தீக்கிரையாக்கினான். இஸ்ரவேல் ஜனங்களின் பாவங்களுக் தண்டனையளிக்க தேவன் நேபுகாத்நேச்சாரைப் பயன்படுத்தினார் என்பதே விவிலியம் நமக்கு தரும் விளக்கமாகும். இந்த அரசனின் ஆரம்ப காலத்தில் பாபிலோன் உலக பிரசித்தம் பெற்றதாக விளங்கியது. இந்த அரசன் இயற்கையின் மேல் அளவிலா ஆசை வைத்திருந்தான். எனவேதான் உலக அதிசயங்களில் ஒன்றான தொங்குதோட்டத்தினை ஏற்படுத்தினான் என நாம் அறிகின்றோம். ஆதியாகமத்தில் சொல்லப்பட்ட ஏதேன் தோட்டம் இங்குதான் இருந்தது. யூப்ரட்டீஸ், டைகிரீஸ் நதிகளின் பாய்நிலம் இங்குதான் அதிகமாக இருந்தது. அத்தகைய அரசன் தனது அகங்கார பெருமையினால் (தானி. 4: 29–30) அரசப்பதவியிலிருந்து தள்ளப்பட்டு "அவன் மனுஷரினின்று தள்ளப்பட்டு, மாடுகளைப்போல் புல்லை மேய்ந்தான். அவனுடைய தலைமயிர் கழுகுகளுடைய இறகுகளைப்போலவும், அவனுடைய நகங்கள் பட்சிகளுடைய நகங்கள் போலவும் வளருமட்டும் அவன் சரீரம் ஆகாயத்து பனியிலே நனைந்தது. " (தானி. 4: 33) என்று சொல்லப்படுகிறது.

நேபுகாத்நேச்சாரின் பெருமை அவனை எவ்வளவுக்கு தாழ்த்தியது என்பதை இந்த வசனம் தெளிவுப்படுத்துகிறது. அவன் "பைத்தியக்காரனானான்" என்று சொல்லப்படுகிறது. பைத்தியக்காரன் தனக்கே தெரியாது புல்லையும் சாப்பிடுவான் அல்லவா! அவன் அரசனாகவே இருந்தாலும் உன்னதமான தேவன் தனக்கு செய்த காரியங்கனை மறந்ததால் அப்படி ஆயிற்று. எனவே அவன் பக்கம் 20

# Message Points

**உயிர்த்தெழுதல்**

| | | |
|---|---|---|
| பாடுகளிலிருந்து | வெற்றி | ரோமர் 8: 36–37; 2கொரி. 4: 16 |
| பாவத்திலிருந்து | வெற்றி | 1 கொரி.15: 16–17, 54 |
| பாதாளத்திலிருந்து | வெற்றி | 1 யோவா. 5:16;கொலோ.2:13–15 |

**உகந்த உபவாசம் ஏசாயா 58**

அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறது
ஒடுக்கப்பட்டவனுக்கு விடுதலை அளித்தல்
பசியுள்ளவனுக்கு ஆகாரத்தைப் பகிர்ந்து கொடுத்தல்
சத்தமிட்டு தேவனிடம் மன்றாடுதல்
பசியுள்ளவனுக்கு இரங்குதல்
ஓய்வுநாளை நற்பண்புகளோடு ஆசரித்தல்
தேவனை எல்லா காரியத்திலும் மகிமைப்படுத்துதல்
தன்னலமற்ற வாழ்க்கை வாழ்தல்
தேவனுடைய வார்த்தையைப் பேசுதல்
ஆகாரம் சாப்பிடாதிருத்தல்

**கிறிஸ்து உயிர்த்தெழாவிடில்...**

| | |
|---|---|
| 1. நாம் உயிரோடெழும்புவோம் என்ற நிச்சயம் இல்லை | வ. 12–13 |
| 2. நமது பிரசங்கம் வீண் | வ. 14 |
| 3. நமது விசுவாசம் மாயையானது | வ. 14, 17 |
| 4. நாம் பொய்யர்களாயிருப்போம் | வ. 15 |
| 5. நாம் பாவத்திலேயே வாழ்ந்துகொண்டிருப்போம் | வ.17 |
| 6. மரித்துபோனவர்கள் அப்படியே அழிந்து போவார்கள் | வ. 18 |
| 7. நமக்கு நம்பிக்கையிராது | வ.19 |
| 8. நாம் மிகவும் பரிதபிக்கப்பட்டவர்களாக இருப்போம் | வ.19 |
| 9. நாம் துஷ்டர்களாயிருப்போம் | வ. 30–32 |
| 10. வாக்குத்தத்தங்கள் பொய்யாகவேயிருக்கும் | வ. 50–54 |
| 11. தீர்க்கதரிசனங்கள் உண்மையற்றதாயிருக்கும் | வ.53–56 |



# இயேசு கிறிஸ்துவைக் குறிக்கும் பெயர்கள்

இயேசுவைக் குறிக்க பல பெயர்கள் வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவைகளைப் பற்றி இந்த பகுதியில் விளக்கம் தரப்பட்டுள்ளன.

**வார்த்தை (WORD):**

யோவான் நற்செய்தியில் இயேசு வார்த்தை என அறியப்படுகிறார் (யோவா. 1: 1, 14). இது லோகோஸ் (Λογος, Logos) என்ற கிரேக்க வார்த்தையின் மொழியாக்கமாகும். வெளிப்படுத்தல் 19: 13–ல் மூன்று காரியங்களைவெளிப்படுத்துவதற்காக இப்பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது: அ) கிறிஸ்து தேவனுடைய குமாரன்; ஆ) அவர் அனைவருக்கும் வாழ்வாகவும் வெளிச்சமாகவும் இருக்கிறார்; இ) அவர் உலக இரட்சகர். இந்த மூன்றும் புதிய ஏற்பாட்டின் முக்கிய போதனைகள் ஆகும்.

பழைய ஏற்பாட்டினைத் தழுவியே கிறிஸ்து வார்த்தை என அழைக்கப்பட்டார். "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்" என்பது அவரது செயல்பாட்டினைக் குறிக்கிறது. அதாவது, ஆதியில் ஜீவனாக இருந்தவர் நமக்குள்ளே வாசம்பண்ணினார். ஜீவன் கண்களால் பார்க்க இயலாதது. ஆனால் ஜீவன் இருப்பது உண்மை. இங்கு வார்த்தையாகிய ஜீவன் மக்களுக்குள் வாசம் செய்கின்றார். அதாவது தேவன் நமக்குள் தோன்றுகின்றார். மேலும் இந்த வார்த்தை நித்தியமானது (Eternal).

வேதாகமத்தில் வார்த்தை என்பது மிகவும் முக்கியமானது. வார்த்தையினால் அனைத்தும் படைக்கப்படுகிறது (ஆதி. 1: 3). அனைத்தையும் படைக்கும் சக்தி/ வல்லமை வார்த்தைக்கு இருக்கிறது எனில் அந்த வார்த்தை நிச்சயம் ஜீவன் உள்ளதுதான். "அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்" (ஏசாயா 55: 11).இதுதான் தேவனுடைய வார்த்தை என்பது. வெறுமையாக திருப்புவது ஜீவனற்ற வார்த்தை, ஜீவனுள்ள வார்த்தை நிச்சயம்ஏதேனும் ஒரு காரியத்தினை செய்யும். அதுபோலவே தேவன் வார்த்தையாகி யாருக்குள் வாசம் செய்கிறாரோ அவர் நிச்சயம் மாற்றப்பட்டு அவரோடு ஐக்கியம்

கொள்கின்றார். இயேசு மீட்பர் என்பது இதனால் புலப்படுகிறது. வார்த்தை வாசம் செய்யும் உள்ளங்கள் புது சிருஷ்டியின் அனுபவத்தினைப் பெறுகிறது.

இவ்விதமாக பழைய ஏற்பாட்டின் படைப்பின் வார்த்தை புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து மூலமாக வெளிப்படுத்தப்படுகிறது (சங். 33:6). வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்கிறோம். அது எழுதப்பட்ட வார்த்தைகளைக் குறிக்காமல் தேவனுடைய செயல்களின் வெளிப்பாடுகளைக் (God's function/ activities) குறிக்கிறது. எனவேதான் வேதாகம வார்த்தை எப்படிப்பட்ட உள்ளங்களையும் மாற்றக்கூடியதாக உள்ளது. உயிருள்ள வார்த்தை கிரியை செய்யக் கூடியதாக உள்ளது. இது ஒரு தொகுப்பானது. எனவேதான் தேவனுடைய வார்த்தைகள் என பண்மையில் சொல்லாமல், ஒருமையில் தேவனின் வார்த்தை என்றே சொல்லுதல் அவசியம். எழுத்துக்களையோ அல்லது வார்த்தைகளையோ சொல்லும்போது மட்டுமே வார்த்தைகள், வசனங்கள் என குறிப்பிடலாம்.

தேவனுடைய வார்த்தை தேவ ஆவியினால்உந்தப்பட்டுஎழுதப்பட்டது (inspiration of the Scriptures) என்பதின் பொருளும் இதில் அடங்கி உள்ளது.ஜீவனுள்ள வார்த்தையினால் ஏவப்பட்ட ஆக்கியோர்களால் எழுதப்பட்டபடியால் இது அழித்துவிட முடியாதது. எத்தனையோ முறை வார்த்தை எரிக்கப்பட்டது, கிழித்தெறியப்பட்டது, அனேகர் சிறைவாசகத்திற்கு ஏதுவாக இருந்தது, கொலைசெய்யப்பட காரணமாக இருந்தது, இன்னும் எத்தனை எத்தனையோ.... ஆனால் ஒவ்வொரு முறையும் அது பலுகிப் பெருகியதே தவிர அழித்துவிட முடியவில்லை. காரணம் வார்த்தை நித்தியமானது, அழிக்கவே முடியாதது. இந்த வார்த்தை இன்றும் உயிருடன் செயல்படுகிறது.

**நசரேயன் (The Nazarene):**

மத்தேயு 2: 23–ல் இயேசு நசரேயன் என அழைக்கப்படுகிறார். பழைய ஏற்பாட்டில் நசரேய விரதம் பற்றி படிக்கின்றோம். நசரேய விரதம் செய்பவர் நசரேயர் என அழைக்கப்பட்டதாக அறிகின்றோம். விவிலிய தொனி முதல் இதழில் இதனைக் குறித்த விளக்கம் தெளிவாகத் தரப்பட்டுள்ளது. ஆனால் இயேசு இப்படிப்பட்ட விரதம் இருந்ததால் நசரேயன் எனக்குறிப் பிடப்படாமல், தான் பிறந்த ஊராகிய பெத்லகேமிலிருந்து வந்து நாசரேத் ஊரில் வாசம் செய்தபடியால் அவர் நசரேயன் எனஅழைக்கப்பட்டார்.

மேலும் பல பெயர்களால் இயேசு அறியப்பட்டார். விளக்கம் அடுத்த இதழில்.



மேலும் கூற வேண்டுமாயின், பரிசுக்காக பந்தயத்தில் பங்கெடுத்தாலும் பரிசினைப் பெற்றுக்கொள்ள தகுதியில்லாமல் செல்லுதல். இப்படி பரிசினைப் பெற்றுக்கொள்ளாமலிருக்க பல காரணங்கள் உண்டு. ஆரம்பத்திலேயே பின்வாங்குதல், சற்று தூரம் ஓடிவிட்டு நின்றுவிடுதல், இடறிவிழுதல், தன்னோடு பந்தயத்தில் ஓடுபவரே இவரை நெருங்கவிடாமல் தடுத்தல், மற்றவர்களால் இடறலடைதல் அல்லது கடைசி இலக்கு வரை சென்றும் இலக்கை அடையாமை என பல காரணங்களை சொல்லலாம். இன்னுமொரு முக்கிய காரியம் தன்னலம். தன்னலம் மிகவும் பெருகியிருப்பதினால் மற்றவர்களும் இலக்கை அடைந்து விடுவார்களோ என்ற அச்சம் கொள்ளுதல். (கிறிஸ்தவ பந்தயம் I, II, III மற்றும் ஆறுதல் பரிசுகளோடு நிற்பதில்லை, பந்தயத்தை முடிக்கிற யாவருக்கும் பரிசு நிச்சயம் என்ற விவிலிய கோட்பாடுகளை மறந்து செயல்படுதல்). எனவேதான் பகிர்ந்துகொள்ளாமை என்ற பொருள் அழுத்தமாக கிரேக்க வார்த்தையில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தேவன் தனக்கென ஒரு ராஜ்யத்தை (இஸ்ரவேலரை) ஏற்படுத்தியதற்கு மேற்குறிப்பிடப்பட்ட காரணங்கள் யாவும் அடங்கும். இவர்கள் மூலமாக தனது அனைத்து படைப்புகளும் இறைவனின் வல்லமையை அறிய வேண்டுமென தேவன் விருப்பினார். ஆனால் மக்கள் தேவனின் நோக்கத்தை மறந்து, அவருக்கு எதிராக கலகம் செய்து, திக்கற்றவர்களையும் ஏழைகளையும் ஒடுக்கி, தனது சுயநலத்தின் அக்கரையினால் மற்றவர்களை ஒடுக்கி அனியாயமாக வாழ ஆரம்பித்தனர். பல சூழ்நிலைகளையும் தீர்க்க தரிசிகள் போன்ற பலரையும் தேவன் எழுப்பி பல போதனைகள் மூலமாக அவர்கள் மனமாற்றடைய விரும்பினார். ஆனால் எதற்கும் மசியாத மக்கள் பலமுறை தண்டிக்கப்பட்டனர். மீண்டும் மீண்டும் கல்லில் மழையாகவே செயல்பட்டனர். ஆனால் இந்த கடைசி நாட்களில் கல்போன்ற உள்ளங்களும் உடைக்கப்படும் என்பதுதான் இறைவாக்கு. யாவரும் மனமாற்றமடைவர்.

இத்தகைய போதனை தேவனை விசுவாசிக்கின்ற ஒவ்வொருவருக்கும் பொருத்தமானதாகவே உள்ளது. கடின உள்ளங்கள் எவ்வளவு கடுமையான பாறையாக இருப்பினும் தேவனின் சம்மட்டியாகிய அவரது ஆவி ஊற்றப்படும்போது உடைக்கப்படும். தேவனின் வல்லமை அப்பொழுது உலகமெங்கும் விளங்கும்.

🕔 மைல்ஸ் கவர்டேல் மொழியாக்கம் செய்யப்பட்டு, எட்டாம் ஹென்றி மன்னனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட வேதாகமம்தான் 1535–ல் ஆங்கிலத்தில் முதலில் அச்சிடப்பட்ட முழு விவிலியம்.

# யார் அந்த அந்திக்கிறிஸ்து
# Who is that Anti-Christ?

## எழுபது வாரம் தானியேல் 9:24-27

"எழுபது வாரம்" பற்றிய விளக்கங்களை இந்தப் பகுயில் படித்துவருகின்றோம். இந்த எழுபது வாரத்தில் முதலாவது மீறுதல் தவிர்க்கப்படும் என்ற கருத்துக்களை கடந்த இதழில் பார்த்தோம். இந்த இதழில் அதனை தொடர்ந்து நடைபெறும் காரியங்களைப் பற்றி பார்ப்போம்.

**2. பாவங்கள் தொலைக்கப்படும் (Make an end of Sins)**

பாவம் என்ற சொல்லைக் குறிக்க பல வார்த்தைகள் எபிரேயு மற்றும் கிரேக்கு மொழிகளில் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவைகளில் "பெசொ" என்ற சொல் வேண்டுமென்றே, துணிகரமாக செய்கின்ற பாவத்தைக் குறிக்கிறது. இஸ்ரவேலரின் அகங்கார. துணிகர பாவங்களைக் குறிக்க ஆமோஸ் தீர்க்கன் பலமுறை இந்த சொல்லினைப் பயன்படுத்துவதை ஆமோஸ் நூலின் வாயிலாக நாம் அறியலாம். ஆனால் இந்த 70 வார காலத்தில் "பாவங்கள் தொலைக்கப்படும்" என்ற சொல்லுக்கு **கற்—றாயா** என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது கா—டா என்ற வினைச்சொல்லைத் தழுவியது. இதற்கு "இலக்கை தவற விடுதல் (to miss the mark)" என்று பொருள். மேலும் 'தொலைந்து போகுதல்,' 'வழிதவறி செல்லுதல்,' 'தவறான காரியங்களை செய்தல்,' 'பிறரைத் காயப்படுத்துதல்,' 'தவறாக வழிநடத்துதல்' போன்ற பொருள்களும் உண்டு. இதற்கு இணையான கிரேக்க சொல் கமார்ட்டானோ என்பதாகும். இதற்கும் "இலக்கை தவற விடுதல் (to miss the mark)" என்றுதான் பொருள். மேலும் இதற்கு "பங்கிட்டுக்கொள்ளாமை," "தொலைந்துபோதல்," ரூ ரூ "வெற்றிக்கொள்ளாமை" போன்ற பொருள்களும் உண்டு.

இலக்கைத் தவற விடுதல் என்றால் நோக்கத்தை நிறைவேற்றாமை என்று சொல்லலாம். அதாவது, ஒரு காரியத்திற்காக பயணம் செய்யும் ஒருவர் அந்த நோக்கம் நிறைவேறாது திரும்பி வருதல் அல்லது இலக்கை அடையாது தோல்வியடைதல் தவற விடுதலாகும். தவறான வழியில் ஒருவரை வழிநடத்துதல் அல்லது மற்றவருக்கு அனியாயம் அக்கிரமம் செய்து தீங்கு வரப்பண்ணுவதினால் தான் நியாயத்தீர்ப்புக்கு உள்ளாவது.



## வேத அறிவுப் போட்டி – 6 முடிவுகள்

**சரியான பதில்கள்**

(1) அச்சாரம்—ஆவியானவர் எபேசி. 1:14. (2) பாவமன்னிப்பு— இரத்தம் 1:7 (3) பிரகாசம்—மனக்கண்கள் 1:19 (4) இரட்சிப்பு—தேவனுடைய ஈவு 2:8 (5) இயேசு கிறிஸ்து—மூலைக்கல் 2:20 (6) மகிமையாயிருக்கிறது—உபத்திரவங்கள் 3:13 (7) அறிவுக்கெட்டாதது—அன்பு 3:19 (8) பிழையற்றது—சபை 5:27 (9) கச்சை—சத்தியம் 6:14 (10) கேடயம்—விசுவாசம் 6:16

**பரிசு பெறுபவர்கள்** 1. Mr. Selvaraj, Gummudipundi
2. Miss. D. Nirmala, Chennai 3. Mr. Makesh, Bihar

**சரியான பதில் எழுதியவர்கள்**

Mr. Wills Inbaraj, Chennai; Ms. S. Femilin Kiruba, Hosur; Mrs. Y. Esther Sarojini Bai, Ponneri; Mrs. J. Pushpavalli, Kovur; Mr. A. Bright Thomas, Chennai; Mrs. Roslet Daniel, Chennai; Mr. S. Chandran,Chennai; Mrs. Grace Rajasingh; Mrs. Johnsy Paulas, Chennai; Mr.Y. Ebin Sam Dhas, Chennai; Mrs. M. Monoba Muthan, Chennai; Mrs. Merch Jaba Mani, ponneri; Miss. M. Victoria Priyasharshni, Gummudipundi; Mr. N.V. Devanesan, Chennai; Mrs. Marrylilly Paul, Chennai; Mrs. Kanaka Samson, Chennai; Mrs. Merline Selvaraj, Mumbai; Mr. S. Anandaraj, Chennai; Mr. A. Edwin, Nellai; Mrs. R.D.S. Mani, Ponneri; Miss. A. Anitha, Trichy; Miss. Grace Christina, Chennai; Mrs. P. Kalavathy, Chennai; Mr. Durai Sundarsingh, Chennai; Mr. V. Jacob Sasikumar, Viruthunagar; Mrs. G. Jabel Sasi, Gummudipundi; Mr. V. Kumar, Chennai; Mr. I. Subameashak, Chennai; Mrs. A. Roselin SamuelRaj, Gummudipundi; Mrs. M. Nalini Manicka Raj, Mumbai; Mr. D. Edwin, Chennai; Mrs. Lalitha Devaraj, Chennai; Miss. S. Sharmila, Chennai; Mr. Y. Sundara Raj, Maharashtra

**வே.அ.போட்டி—5ல் சரியான பதில் எழுதியவர்கள் (கடந்த இதழ்தொடர்ச்சி)**

Mrs. G.V. Jasbel Sasi, Gimmidipundi, Mr. J. Wills Inbaraj, Chennai; Mrs. Grace Rajasingh, Lakshmipuram; Mrs. Roslet Daniel, Chennai; Mrs. Y. Lalitha Devaraj, Chennai; Mr. A. Edwin Macilamani, Nellai; Mrs. Rajan Edward, Gummidipundi; Miss. K. Hannah Premalatha, Gummidipundi; Miss. S. Femilin Kiruba, Hosur; Mrs. P. Kalavathy, Chennai; Miss. Merlin Selvaraj, Mumbai; Mr. P.J. Selvaraj, Gummidipundi; Miss. B. Anitha, Trichy; Miss. Victoria Priyadharshni, Gummidipundi; Mrs. M. Mercy Jebamani, Ponneri; Mr. T. Thangaraj, Adikalapattanam; Mr. D. Azariah, Adikalapattanam; Mr. B. Arul Jebaraj, Adikalapattanam; Mrs. Esther John, Meppedu.

## சங்கீதத்தில் ஆரோகணம்
## Degrees iN THE BOOK OF PSALMS

சங்கீத நூலில் பயன்படுத்தப்பட்டுள்ள பல பெயர்கள் வார்த்தைகள் பலருக்கும் நன்கு புரியாதவைகளாகவே உள்ளன. அத்தகைய வார்த்தைகளில் சேலா (Selah), மித்தாம், (Miktam), அகரவரிசைப் படல்கள் (Acrostic Poems), மஸ்கீல் (Muskil), சிகாயோன்(Shiggalion), மிஷ்மோர் (Mizmor), இகாயோன் (Higgaion) போன்ற பதங்களின் பொருள்களை நாம் முந்தைய இதழ்களின் மூலமாக தெரிந்து கொண்டோம். ஆரோகணம் (Degrees) என்ற பதத்தின் பயன்பாட்டினைப் பற்றி இந்த இதழில் தெரிந்துகொள்வோம்.

120–134 வரையுள்ள சங்கீதங்களின் தலையங்கங்களில் ஆரோகண சங்கீதங்கள் என தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. எபிரேய மொழியில் இதற்கு மிகச்சிறப்பாக הַמַּעֲלוֹת hamma'aloth என தலையங்கம் கொடுக்கப்பட்டுள்ளது. பொது மொழிபெயர்ப்பு விவிலியத்தில் இதனை "சீயோன் மலைத் திருப்பயணப் பாடல்" என மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. சில ஆங்கில மொழிபெயர்ப்புகளில் இதனை A Song of Ascents என மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்த 15 சங்கீதங்களும் கூடாரப் பண்டிகை காலங்களில் பாடப்படுவதற்காக இயற்றப்பட்டப் பாடல்கள் என்பதை இதன் கருப்பொருள் நமக்கு சுட்டிக்காட்டுகின்றன. ஏனெனில், இந்த பண்டிகை நன்றி தெரிவிக்கும் பண்டிகையாக இஸ்ரவேலர் கொண்டாடி வந்தனர். இத்தகைய தன்மைகொண்ட பண்டிகைகளை இன்றும் யூதர்களிடையே நாம் காண இயலும்.

**"ஆரோகணம்"** என்றால் "உயரச் செல்லுதல்," "முதன்மை பெறுதல்," "உயரமான இடத்திற்கு பயணம் செய்தல்," "ஒருபடி முன்னேறுதல்" "[ஏணிப்படி மேல் ஏறுவதைப்போல] மேலாக செல்லுதல்" என பொருள்படுகிறது. இந்த சங்கீதங்களில் குறிப்பாக "உயரமான இடத்திற்கு பயணம் செய்தல்" என்ற பொருளிலும் அதன் இணைப் பொருளாகிய "ஆழமான நம்பிக்கைக் கொள்ளுதல்" என்ற பொருளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளதை அதிகமாக நாம் கவனிக்கலாம். இந்த தொகுப்பின் கடைசி சங்கீதத்தினை நாம் கவனித்தால் இதன் பொருள் தெளிவாகிறது. நம்பிக்கை ஒவ்வொரு படிப்படியாக முன்னேறி கடைசியில் வானத்தையும் பூமியையும் படைத்த தேவனிடமிருந்து மட்டுமே நமக்கு



உள்ளது. ஓர் ஓடைமேலுள்ள குகைகளில்தான் இங்கும் ஏடுகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. தாஅமீரே வகுப்பைச் சார்ந்த பழங்குடியினர்தான் இவ்விடத்திலுள்ள சுருள்களை கண்டுபிடித்தனர். பின்னர் 1952–ம் ஆண்டு தொல்பொருள் ஆராய்ச்சி இங்கு நடத்தப்பட்டது. இங்கு விவிலிய நூல்களும் வேறு பல அரிய நூல்களும் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. பழைய ஏற்பாட்டு நூல்கள் மெசரேட்டிக்கு முறையில் (புள்ளிவைத்து எழுதும் முறை, உயிரெழுத்து அடையாளங்கள்) எழுதப்பட்டிருந்தது.

இந்த முராபாத்தில் கண்டெடுக்கப்பட்ட சுருள்கள், இவைகள் எழுதப் பட்ட காலத்தினை அறிந்துகொள்ள பெரிதும் உதவுகின்றன. ரோமர்களுக்கு எதிராக எழுந்த இரண்டாவது புரட்சி பற்றி இந்த ஏடுகள் தெரிவிக்கின்றன. ஓர் ஏட்டில் புரட்சியின் தலைவன் கோசாபா மகன் சீமோன் கையெழுத்திட்டிருந்தார். 'சீமோன் இஸ்ரவேலின் இளவரசன், இஸ்ரவேலுக்கு விடுதலையை வாங்கித் தந்தவன் இவன்' என இதல் குறிக்கப்பட்டுள்ளது.

**கிர்பெத்மிர்து என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட ஏடுகள்:**

கிர்பெத்மிர்து என்ற இடத்திலும் பழமையான ஏடுகள் பல 1950–ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டன. இங்கு கிரேக்கம், பாலஸ்தீனிய அரமேய மொழிகளில் எழுதப்பட்ட ஏடுகள் பலவும் கிடைத்தன. இவைகள் கி.பி. 5–ம் நூற்றாண்டு முதல் 8–ம் நூற்றாண்டு காலத்தை சார்ந்தவைகள். இந்த இரு குகைகளிலும் கண்டெடுக்கப்பட்ட ஏடுகள் கும்ரான் ஏடுகளிலிருந்து மாறுபட்டதாக உள்ளன.

மேலும் சுமார் 37 குகைகளில் பல மண் பானைகள் மறைத்து வைக்கப் பட்டிருந்தது கண்டெடுக்கப்பட்டன. அவைகளில் மிக பழமையான பல ஏடுகளும் இருந்தது. சில நூதன பொருள்களும் இந்த குகைகளிலிருந்து கண்டெடுக்கப்பட்டன. அவைகளில் ஒன்று, "இரண்டு செப்புத் தகட்டுச் சுருள்கள்." இதில் பலவிதப் புதையல்கள் எங்கு மறைத்து வைக்கப்பட்டுள்ளன என்ற குறிப்புகள் உள்ளன. மேலும் இங்கு வாழ்ந்த எசேனியர்கள் என்ற மக்களின் வாழ்க்கை முறை, சடங்காராச்சாரங்கள், ஒழுக்கமுறை விதிகள், போதனைகள், அவர்களது பணிகள், அவர்களது தலைவன் "நீதியின் போதகர்" (Teacher of Righteousness), அவரது விளக்கவுரை பகுதிகள், அவர்கள் வாழ்ந்த இடம் பற்றிய பல குறிப்புகளை இந்த ஏடுகள் தெரிவிக்கிறது. இந்த மக்களின் போதனையில் யோவான் ஸ்நாபகன் மற்றும் இயேசு ஈர்க்கப்பட்டிருக்கலாம் என கருதப்படுகிறது.

# THE BIBLE AND ARCHAEOLOGY

## சவக்கடல் ஏடுகள்

விவிலிய ஆய்வுகளுக்கும் பல நூற்றாண்டுகளாக வேதாகமம் பற்றி நிலவிய கருத்துக்களுக்கும் சவக்கடல் ஏடுகளின் கண்டெடுப்பு எவ்விதம் பயனுள்ளதாக விளங்குகிறது என அறிந்து கொள்வதே இப்பகுதியின் நோக்கமாகும்.

1947–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் கும்ரான் அருகிலுள்ள ஓடையருகே தொலைந்துபோன தனது ஆடுகளை தேடிவந்த பெடுயன் என்ற நாடோடி வகுப்பைச் சேர்ந்த ஆடுமேய்க்கும் சிறுவனால் முதலில் இந்த ஏடுகள் கண்டெடுக்கப்பட்ட விவரங்களை கடந்த சில இதழ்களில் அறிந்து கொண்டோம். 200–க்கும் மேற்பட்ட ஏட்டுச்சுருள்கள் பல குகைகளிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டன. இந்த கண்டுபிடிப்புகள் புதை பொருள் ஆய்வர்கள் உட்பட அனைவரது எண்ணத்தையும் கவர்ந்தது. இதனை ஆய்ந்த பர்ரோஸ் என்ற வல்லுநர் ஏசாயா மற்றும் ஆபகூக் பகுதிகளை இணைத்து அவைகளை ஓர் நூலாக 1950–ம் ஆண்டு வெளியிட்டார். மீண்டும் 1951–ம் ஆண்டு இரண்டாவது தொகுப்பினை வெளியிட்டார். இதில் இரு சிறிய சுருள்களின் விளக்கங்கள் படங்களோடு வெளியிடப்பட்டது. கும்ரான் குகைகளில் வாழ்ந்து வந்த மக்களின் “ஒழுக்கங்களின் கையேடு” என்ற நூலின் பகுதியும் இதில் இடம்பெற்றிருந்தது. இதனைத்தொடர்ந்து பல பகுதிகள் வெளியிடப்பட்டன. ஏசாயா ஆகமம், ஒளியின் பிள்ளைகளுக்கும் இருளின் பிள்ளைகளுக்கும் நடக்கும் போர், நன்றி சங்கீதங்களின் பாகங்கள் என்பவைகள் இவைகளில் முக்கியமானவைகள்.

**வாடி முராபாத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஏடுகள்:**

வாடி கும்ரான் என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட ஏடுகளைப் பற்றி இதுவரை பார்த்தோம். இங்கு கண்டெடுக்கப்பட்டஏடுகளைப்போல1951–ம் ஆண்டு வாடி முராபாத்திலும் பல வேதாகம சுருள்களும், விளக்கவுரை பகுதிகளும், அங்கு வாழ்ந்த மக்கள் பற்றிய தகவல் ஏடுகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்விடம் கும்ரானிலிருந்து 18 கி.மீ. தெற்கே



உதவி வருகிறது என்ற மிகப்பெரிய ஆழமான நம்பிக்கையோடு முற்றுப்பெற்றிருப்பது இதனை உறுதிப்படுத்துவதாக உள்ளது. மேலும் இந்த சங்கீதங்கள் விரோதிகளிடமிருந்து தேசம் முற்றிலும் விடுதலைப்பெறும்படியாகவும், அவ்வாறு விடுதலைப்பெற்று சமாதானமாக இருக்கும்போது விடுதலையளித்த தேவனை ஸ்தோத்தரித்து பாடிய நன்றி பாடல்களாகவும், தேசத்தையும் அதன் குடிகளையும் (ஒவ்வொரு குடும்பத்தையும்) தேவன் பாதுகாக்கும்படி வேண்டிக்கொள்ளும் பாடல்களாகவும், சீயோனில் வாசம் செய்யும் தேவனால் மட்டுமே இது சாத்தியம் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தும் பாடல்களாகவும், தேச ஒற்றுமைவேண்டியும் பாடப்பட்ட பாடல்களாக அமையப்பெற்றிருப்பதைக் காணலாம். இப்பாடல்கள் இரவு தொழுகையோடு நிறைவு பெற்றிருப்பதைக் கவனிக்கும்போது மக்கள் எவ்வளவு வாஞ்சையோடு இறைவனிடம் மன்றாடி அவரது ஆசியைப்பெற்றுக்கொள்ள ஆவலாக இருந்திருக்கின்றனர் என்பது புலனாகிறது.

இந்த சங்கீதங்களை நம்பிக்கை சங்கீதங்கள் எனலாம். தேவனிடமிருந்து மட்டுமே உதவிவரும் என்ற பெருத்த விசுவாசம் எல்லா சங்கீதங்களிலும் தொனிப்பதை நாம் பார்க்கும்போது நமது விசுவாசத்தின் அளவினை ஒப்பிட்டுப்பார்க்க நமக்கு மிகவும் உதவிபுரிகின்றன. நாம் தேவனை விசுவாசத்தால் பற்றிக்கொண்டால் ஒவ்வொரு காரியத்திலும் நாம் படிப்படியாக முன்னேறிக்கொண்டே இருப்போம். அத்தகைய ஒவ்வொரு காரியத்திற்காகவும் நாம் தேவனுக்கு சாட்சியுடையவர்களாக இருந்து அவரை துதித்து பாடி வல்லமையும் மகத்துவமுமான கர்த்தரை மனதார வாழ்த்த வேண்டும் என்ற உன்னதமான போதனைகளை இந்த பரமேறும் சங்கீதங்கள் நமக்கு போதிக்கின்றன.

**முள்ளுகளினாலான முடி (Crown of Thorns)**

விவிலியத்தில் முள் கொடுமைப் படுத்துதலுக்கும், கேலிசெய்தலுக்கும், பரியாசத்திற்கும், பலன்கொடாமைக்கும் அடையாளமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. சுட்டெரிக்கப்படுவதே அதின் முடிவு. இத்தகைய பண்புகளுடைய முள்ளுகளினாலான கிரீடம் ஒன்று இயேசுவின் தலையில் வைக்கப்பட்டது (யோவா. 19: 2–6). **akantha** என்ற கிரேக்க வார்த்தைக் கொண்ட இந்த முள் ஒன்றுக்கும் பயனற்றதாக கருதப்பட்டது. இயேசுவும் அப்படிதானே கருதப்பட்டார்! ‘ஆகாதவன்’ என்று தனது சொந்த மக்களே அவரை வெறுத்து ஒதுக்கி சிலுவையில் அறைந்து கொன்றனர். ஆனால் என்ன ஆச்சரியம் சிலுவை மீண்டும் துளிர்விட்டதே (உயிரோடு எழுந்ததே!). இது விந்தையிலும் விந்தைதான்.

# விவிலியத்தின் நூல்கள்
# நியாயாதிபதிகள்

நியாயாதிபதிகள் நூல் “நீதிபதிகள் நூல்” என அழைக்கப்படுகிறது. எபிரேய மொழியில் இதற்கு “ஷோபேட்டிம்” (Sopetim) என்று பெயர். ஷேபேத் என்பதற்கு நீதிபதி என பொருள். இது கிரேக்க மொழியில் “க்ரிடைய” (Kritai) என மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. எபிரேய வார்த்தையாகிய שפטים **sptym–**ன் படி இதன் பொருளினை விடுதலை வீரர்களின் நூல் என குறிப்பிடுவது அதிக பொருள் நிறைந்ததாக உள்ளது.

“ஷோபேட்டிம்” என்பதின் பொருள் மீட்பர்கள் அல்லது இளவரசர்கள் அல்லது தலைவர்கள் அல்லது இரட்சகர்கள் என்பதாகும். இன்றைய நீதிபதிகளைப்போல சட்டங்களின் அடிப்படையில் தீர்ப்பளிப்பது அல்ல இவர்கள் பணி. ஆயினும் சில நேரங்களில் நியாயம் விசாரிப்பவர்களாகவும் விளங்கிவந்தனர் (3: 9–4:4) மாறாக, பிற மக்களின் கொடுமைகளிலிருந்து இஸ்ரவேலரை காப்பாற்றி, அவர்களை பாதுகாக்க தேவனால் அவ்வப்போது ஏற்படுத்தப்பட்ட வீரத்தலைவர்கள்தான் இவர்கள். மற்றும், நிலையான ஆட்சியினை ஏற்படுத்த நியமிக்கப்பட்டவர்களும் அல்ல இவர்கள். அவ்வப்போது தேவ ஆவியினால் உந்தப்பட்டு, பெலனடைந்து விடுதலைக்காகப் போராடியவர்கள்.

ஏன் பல விடுதலைத் தலைவர்கள் தோன்ற வேண்டும் என நாம் நினைக்கலாம் ? அதற்குக் காரணங்கள் உண்டு. கானான் தேசத்தில் வாசம் செய்த இஸ்ரவேலர் வாழ்வினை ஓர் வாழ்க்கை சக்கரத்திற்கு (Life Cycle) ஒப்பிட்டு சொல்லலாம். எப்படியெனில்பாவம் செய்தல்– அன்னிய நாட்டு அரசனால் தண்டிக்கப்படல்– தேவனிடம் மன்றாடுதல்– விடுதலை வீரர் ஒருவரால் விடுதலை– நாட்டில் சமாதானம் நிலவுதல்– மீண்டும் பாவம் செய்தல் இப்படியாக இந்த நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடந்துகொண்டிருந்தது. எனவே ஒவ்வொரு முறை இறைவனிடம் மனம்வருந்தி மன்றாடும்போதும் ஓர் வீரர் மூலம் விடுவிக்கப்படுதலைக் காணலாம்.

யோசுவாவின் காலந்தொட்டு சாமுவேல் காலம் வரையுள்ள இஸ்ரவேல் வரலாறு இந்நூலில் இடம்பெற்றுள்ளது.



**முக்கியக் கருத்து:** மன்றாட்டும் விடுதலையும்
அதிகாரங்கள்: 21 வசனங்கள்: 618

**நூலின் அமைப்பு:**

இந்நூலினை மூன்று முக்கிய பகுதிகளாகப் பிரிக்கலாம்:

I முன்னுரை: யோசுவாவின் காலத்திற்குப் பின் நடந்த நிகழ்ச்சிகள் 1: 1–3:6

1. யூதா கிபியோனின் வெற்றி 1: 1–24
2. பிற கோத்திரங்களின் வெற்றி 1: 25–36
3. கில்காலிலிருந்து புறப்படுதல் 2: 1–5
4. இஸ்ரவேலர் வழிதவறுதல் 2: 6–3: 6

II. நியாயாதிபதிகள் 3: 7–16:31

| | | பகைவன் | அடிமைத்தனம் | அமைதி |
|---|---|---|---|---|
| 1. ஒத்தினியேல் | 3: 7–11 | கூஷான் | 8 ஆண்டுகள் | 40ஆண்டுகள் |
| 2. ஏகூத் | 3: 12–30 | எக்லோன் | 18 | 80 |
| 3. சம்கார் | 3: 31 | பெலிஸ்தியர் | | |
| 4. தெபோரா | 4: 1–5: 32 | யாபீன் | 20 | 40 |
| பாராக் | | சிசரா | | |
| 5. கிதியோன் | 6: 1–8:35 | மீதியானியர், அமலேக்கியர் | 7 | 40 |
| 6. அபிமலேக்கு (நீதிபதி அல்ல) | 9: 1–57 | | | |
| 7. தோலா | 10: 1–2 | ( இசக்கார் கோத்திரம்) | | 23 |
| 8. யாபீர் | 10: 3–16 | (கிபியாத்தான்) | | 22 |
| 9. எப்தா | 10: 17–12:7 | அம்மோனியர் | 18 | 6 |
| 10. இப்சான் | 12: 8–10 | (பெத்லெகேம்) | | 7 |
| 11. ஏலோன் | 12: 11–12 | (செபுலோன் கோத்திரத்தான்) | | ? |
| 12. அப்தோன் | 12: 13–15 | (எப்பிராயீம் கோத்திரத்தான்) | | 8 |
| 13. சிம்சோன் | 13: 1–16:31 | (தாண் கோத்திரத்தான்) பெலிஸ்தியர் | 40 | 20 |

III. நியாயாதிபதிகளுக்குப்பின் நடந்த நிகழ்ச்சிகள் 17: 1–21: 25

1. மீகாவின் ஏபோத் 17: 1–13
2. தாண் கோத்திரத்தார் நாடு பெயர்ச்சி 18: 1–31
3. கிபியா ஊராரின் கொடுஞ்செயல் 19: 1–30
4. பென்யமீன் கோத்திரத்தின்மீது போர் 20: 1–48
5. பென்யமீன் பெண் கொண்ட முறை 21: 1–25